சூலை - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 9

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

## தமிழகத் தமிழ்ச் சங்க கூட்டமைப்பும்
## மதுரை, நான்காம் தமிழ்ச்சங்கமும் வாழ்த்துகிறது

சித்தாந்த நன்மணி
கல்வெட்டியல் அறிஞர்
திருமுறைத் தென்றல்
முதுபெரும் புலவர்

**பேராசிரியர் முனைவர் கா. அரங்கசாமி**
அவர்களின்

# பவளவிழா

**தி.பி. 2044 ஆடி 11 (27.07.13)**

குன்றத்துக் கொம்புத் தேன்
முல்லை வாழைப்பழத் தேன்
மன்றத்து மாப்புலவர்
செந்தமிழ்த்தேன் என்ற முத்தேன்
உண்டாலே தேன்
முனைவர் கா. அரங்கசாமி அவர்களின்
பேச்சும் தேன் மூச்சும் தமிழ்த்தேன்
அண்ணலாரின் பவளவிழாவே
தித்திக்கும் 'செந்தமிழ்'த்தேன்

**இரா. குருசாமி**
தலைவர், தமிழக தமிழ்ச்சங்க கூட்டமைப்பு

**இரா. அழகுமலை**
செயலர், மதுரைத் தமிழ்ச்சங்கம்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்
பகுதி : 9 திருவள்ளுவர் ஆண்டு 2044
சூலை 2013




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

ஆசிரியர்
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| க. வெள்ளை வாரணனாரின் செந்தமிழ்ப் பணிகளின் நினைவுகள் | தருமையாதீனப்புலவர் தா. குருசாமிதேசிகர் | 4 |
| ஒருநாள் சிகரம் அடைந்திடலாம் ! | கவிஞர் அ. கனகசபாபதி, எம்.ஏ., பி.எட்., | 9 |
| செந்தமிழ் திங்களிதழ் ஓராண்டு ஓர் ஆய்வும், கவிவேந்தர் கா. வேழவேந்தன் பங்களிப்பும் | டாக்டர் வ.க. கன்னியப்பன் | 10 |
| யார் நல்லாசிரியன்? | டாக்டர் வ. க. கன்னியப்பன் | 16 |
| சிலப்பதிகாரத்தில் ஒருநாள் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 22 |
| நற்றிணையில் வரலாற்றுச் செய்திகள் | இரா. ஜாக்குலின் இசபெல்லா | 27 |
| செந்தமிழை நான் மறவேனே | முனைவர் தமிழப்பன் | 30 |
| திருமுருகாற்றுப்படையில் வழிபாட்டு முறைகள் | த. ஆண்டாள் | 32 |
| தொல்காப்பியப் பூங்காவில் பண்டைய மகளிர் மாண்பு | பா. திருமகள் | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம்!

சூலை மாத இதழைச் சிறப்பாகவும், செழிப்பாகவும் தங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமையடைகிறேன். சைவமும், தமிழும் தழைத்தோங்கப் பணிசெய்த பேராசிரியர் க. வெள்ளைவாரணாரின் நினைவுகளை செந்தமிழ் வாசகர்களின் நெஞ்சில் பதியச் செய்திருக்கிறார் பெரும்புலவர் தா. குருசாமிதேசிகர். செந்தமிழ் இதழில் கவிவேந்தர் வேழவேந்தன் அவர்களின் பங்களிப்பை ஓராண்டு முழுவதும் தொகுத்து விமர்சித்திருக்கும் பாங்கால் டாக்டர் வ.க. கன்னியப்பன் அவர்கள் பாராட்டுப் பெறுகிறார். மேலும் இன்று ஆசிரியத் தொழில் செய்பவர்களும் நல்லாசிரியர் விருது பெறுகின்றவர்களும் தங்களைச் தற்சோதனை செய்து கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நல்லாசிரியர் யார் என்ற தலைப்பில் விளக்கம் தந்திருப்பது பாராட்டுக்குரியது. வழக்கமாகக் கவிதை மழை பொழியும் கவிவேந்தர் இம்மாத இதழில் சிலப்பதிகாரத்தில் ஒருநாள் என்று கருத்து மழை பொழிந்துள்ளார். இடர் இன்றி தமிழன் என்ற பெருமையுடன் இன்பம் அடையலாம்.

ஜாக்குலின் இசபெல்லா அவர்கள் நற்றிணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள தமிழ் மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளை பெருமைபட எடுத்தியம்பியுள்ள நயம் பாராட்டிற்குரியது. திருமுருகாற்றுப்படையில் வழிபாட்டு முறைகள் எனும் கட்டுரையில் த. ஆண்டாள் அவர்கள் எல்லாத் தன்மைகளும் பொருந்தியுள்ள கடவுளாக முருகப் பெருமானை நக்கீரர் வழிநின்று காட்டியிருக்கும் விதம் மிக நன்று. தொல்காப்பியப் பூங்காவில் பண்டைய மகளிரின் மாண்பு எனும் தொடர் கட்டுரையை குமாரபுரம் பா. திருமகள் அவர்கள் தொடங்கியிருக்கிறார். சிறந்த மரபுக் கவிதைகளோடும் வாசகர் வாசகங்களோடும் இம்மாத இதழை நேசிக்கும் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

# க. வெள்ளை வாரணனாரின் செந்தமிழ்ப் பணிகளின் நினைவுகள்

தருமையாதீனப்புலவர்
தா. குருசாமிதேசிகர்

பேராசிரியர் க. வெள்ளை வாரணனார் பிறந்தது திருநாகேச்சுரம். பள்ளிப்படிப்புக்கு மேல், அவர் ஆவுடையார் கோவில் நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்த, திருவாசகப் பாடசாலையில், தேவாரத் திருவாசகப் பயிற்சி பெற்றார். பின்பு, சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் (இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என வழங்கப்படுகின்றது.) சேர்ந்து தமிழ் வித்துவான் பயின்று, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார் . தமிழிலும் திருமுறையிலும் ஆழங்கால்பட்ட அவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப்பணியில் அமர்த்திக் கொண்டது.

## அறிஞர்கள் பாராட்டு

இவர் காலத்தில் வாழ்ந்த, மூத்த தமிழறிஞர்கள், விபுலானந்த அடிகளார், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, கா.சு. பிள்ளை முதலியவர்களின் பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியவரானார். ஆதலால் தமிழாராய்ச்சித் துறையிலும் தன் முத்திரையைப் பதித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குப் பெருமை சேர்த்தார்.

## தமிழ்ப்பணி :

காலந்தோறும் தமிழ் வரலாற்றுப் பணி ஆய்வு தொடங்கியபோது தொல்காப்பிய வரலாறு எழுதும் பணி இவருக்கு ஒதுக்கப்பட்டது. இவரது தொல்காப்பிய வரலாற்று நாவலைப் பாராட்டி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஐந்து கட்டளைக் கலித்துறைப் பாடலில் புகழ்ந்து போற்றியுள்ளார். இவருடைய நூலைப் படித்தே, தமிழக முதல்வராயிருந்த கலைஞர் தொல்காப்பிய பூங்கா வரைந்தார். பிறகு திரு. தமிழண்ணல் முயற்சியால் கலைஞரவர்களால் பேராசிரியர் குடும்பத்திற்குப் பொற்கிழி வழங்கப்பட்டது நினைந்து போற்றத்தக்கதாகும்.

## திருமறைப்பணி

இளமையிலேயே திருமுறைக்கல்வி கற்றதன் பயனாக தமிழ்க் கற்றவர் யாருமே திரும்பிப் பார்க்காத பன்னிரு திருமுறைகளை ஆய்வு செய்து பன்னிரு திருமுறை வரலாறு இரண்டு பாகங்களாக திருப்பனந்தாள் காசித்திருமடம், அறக்கொடை மூலமாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வாயிலாக வெளியிட்டுப் பெரும் புகழைப் பெற்றார். தருமையில் அன்றிருந்த கயிலைக் குருமணிகள் பேராசிரியர்க்குத் திருமறைக் கலைஞர் என்ற விருதை ஆவணிகுலநாள், விழாவில் வழங்கிச் சிறப்பைப் பெற்றார். பன்னிருதிருமுறை வரலாறு இன்று பலபதிப்புப் பெற்று கழகத்திற்கு இன்றும் சிறப்பைப் பெற்றுத் தருகிறது.

## மதுரையில்

அண்ணாமலைப் பல்கலைக்கலையில், ஓய்வு பெற்ற பிறகு, மதுரைப் பல்கலைக்கழகம், புதிதாகத் தொடங்கிய, தமிழாராய்ச்சித் துறையில் பணியேற்று, பேராசிரியவர்கள் தருமையாதினம் ஸ்ரீகுருஞான சம்பந்தர் மடத்தில் ஓராண்டு தங்கியிருந்தார்கள். திருமுறை ஊற்றம் மிக்க பேராசிரியர்கள் பாண்டிய நாட்டுத் திருத்தலங்களுக்குப் பயணம் செய்யச் செய்து, அவ்வத்தலங்களில் திருமுறைகளை விளக்கம் செய்து, எங்களுக்கெல்லாம் விளக்கம் அளித்தார். வாரந்தோறும் ஞாயிறன்று, மதுரை மீனாட்சி சுந்தர் கோயிலின் சங்கத்தார் கோயில் முன்றிலில் வழிபாடாற்றச் செய்து, பதினோராம் திருமுறைப் பாடல்களைப் பாராயணம் செய்யச் செய்து விரவுரை நல்கி மகிழ்வளிப்பார். தன் சொந்த அறக்கொடையாகத் திருமுகப் பாசுரம் கல்வெட்டு ஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றம் வாயிலாக, சங்கத்தார் கோயிலில் நிறுவிப் புகழ் சேர்த்தார். பணிமன்றம் பெயரில் அவர் இன்றும் ஒளி தருகிறார்.

## பன்னிரு திருமுறை மன்றத்தில்

மதுரைப் பன்னிரு திருமுறைமன்றப் புரவலராயிருந்த திருமுறை காவலர் திரு. முத்து பழனியப்பச் செட்டியாரின் அன்பிற்கு உரியவராயிருந்த காரணத்தால் பேராசிரியரவர்கள் பன்னிரு திருமுறை மன்ற விழாவிலும் கலந்து மதுரை வாழ்வில் திருமுறைப் பணி செய்தார். திரு. செட்டியார் அவர்களின் சிற்றுந்து மூலமாக மதுரையைச் சுற்றிய

சிவத்தலங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று தல வரலாறும் திருமுறை விளக்கங்களும் நல்குவார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழருச்சனை பற்றிய சிந்தனை வட்டம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்தது.

## முடிவு கூறல்

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் நமது பேராசிரியரோடு கலந்து கொண்டு, வடமொழி அர்ச்சனையோடு, தமிழருச்சனையும், சமமாகச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திப் பேசி, தமிழர்ச்சனைக்குரிய அகத்தியர் தேவாரத் திரட்டு மூவர் பதிகங்களும் அர்ச்சகர்க்குத் தெரிந்திருக்கப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அப்பொழுது அன்பர் ஒருவர் வடமொழியால் தமிழுக்கு நன்மையா? தீமையா? என்று வினா எழுப்பினார். மகா வித்துவான் இரண்டையும் இணைத்துப் பேசினார்கள். நமது பேராசிரியரவர்கள், உடனே எழுந்து தமிழுக்கு வடமொழியால் தீமையே என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல முடிவு கூறினார்கள். அடிகளார் அவர்களும் வியப்புடன் பாராட்டினார்கள்.

## தமிழ்ப்பல்கலைப் பணி

மதுரைப் பல்கலைப் பணிக்காலம் முற்றிய பிறகு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பேராசிரியர்க்கு ஆய்வுப் பணி வழங்கி அலங்காரம் செய்தது. மதுரையை விட்டுச் சென்று, அப்பணி ஏற்ற அவர்கட்கு, மதுரை போல திருமுறைத் தமிழன்பர் வட்டம், அமைய வாய்ப்பில்லாமற் போய்விட்டது. அவர்களின் திருமுறைச் சிந்தனை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக வெளிவந்துள்ள சைவ சித்தர்கள் சாத்திர வரலாறு தமிழுக்கு அரிய பெரிய நன்கொடையாகும்.

## துணைவேந்தர் பாராட்டு

தமிழ்ப் பல்கலைத் துணைவேந்தராயிருந்த முனைவர் இ. சுந்தரமூர்த்தி, சாத்திர வரலாற்று அணிந்துரையில் கீழ்க்கண்டவாறு பேராசிரியரைப் பாராட்டுவார்கள்.

சைவமும் தமிழும் தம்மிரு கண் எனப் போற்றிய திரு. க. வெள்ளைவாரணார் அவர்கள் 70 ஆண்டுக்கு மேலாக (14-1-1917 =

13-6-1988) இந்நிலவுலகிலே வாழ்ந்திருந்த சைவப் பெரியாராவார். இலக்கண இலக்கியப் பெரும் புலமையாளரான இவர் படைத்த, பன்னிரு திருமுறை வரலாறு பயன் மிக்க தொரு நூலாகும். மற்றொரு படைப்பான சைவ சித்தாந்த சாத்திர வரலாறு என்னும் இப்பெரு நூலினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இப்போது பெருமையுடன் வெளியிடுகிறது. – என்பது அணிந்துரை.

பேராசிரியரின் சைவ சித்தாந்த சாத்திர வரலாறு ஒவ்வொரு தமிழன் இல்லத்தையும் அலங்கரிக்கும் நூலாகும். கலைமகள் கொலுவிருக்கும் அந்நூல் தமிழ் மாணவரின் வழிபாட்டிற்குரியதுமாகும்.

## அவர் சிந்தனையில் இரண்டு

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்தில் ஒன்று!

வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்ட மளிப்பன அஞ்செழுந்துமே – என்ற

பாடலில் பண்டையிராவணன் என்பதற்கு இவர் இராவணன் பிறன்மனை விழைவதற்கு முன்பு என்று பொருள்கூறி தருமையாதீன 26ஆவது குருமூர்த்திகளே, புகழ்ந்து போற்றும்படி, திருமுறையில் ஆழங்கால் பட்டமையை உணரலாம். திருமுறைவாணரும் உணராதது இப்பொருள்.

## மற்றொன்று

திருமறைக் காட்டில் திருக்கதவம் திறக்க அடைக்கப் பாடிய சம்பவம் பெரிய புராணத்தில் பேசப்படும் போது திருஞானசம்பந்தர் புராணத்தில் திருமுறைக்கும் வேதத்துக்கும் உரிய ஒற்றுமை, வேற்றுமை சம்பந்தரால் நிகழ்த்தப்பட்டதைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுவார்.

திருமறை நம்பர்முன்பு அருள் செய்த
அதனைச் செப்பும்!
ஒருமையில் நின்ற தொண்டர்
தம்பிரானார் பாவ் ஒக்க

வரும் அருட் செய்கை தாமே
வகுத்திட வல்லோ ரென்றால்
பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு
இடையீடு பெரியதாமன்றே

என்ற இப்பாடலை, என்னிடம் பேராசிரியர் கூறும் போது, வேத விதியையும் நன்மைக்காக தெய்வத்தமிழ் கொண்டு மாற்றலாம் என்று புரட்சிகரமான சிந்தனையுடன் சிந்திக்க வைத்தார்கள்.

இச்சிந்தனையை இரண்டு வரலாறுகளிலும் பதிவு செய்ய வாய்ப்பில்லாது போய்விட்டது என்றும், அவர்கள் சிவனடி சேர்வதற்கு முன்பு அருளிய வாசகம், செம்மொழி கண்ட தமிழ் உலகம், அறிய வேண்டிய அருளிப் பாடாகும்.

## பிறபணிகள்

இந்தி எதிர்ப்புப் பேராட்டம் தீவிரமாக நிகழ்ந்தபோது அன்று முதல்வராயிருந்த இராஜாஜிக்கு இவர் காக்கைவிடு தூது எழுதி தன் பங்கிற்கு எதிர்ப்பைத் தெரிவித்ததாக என்னிடம் கூறினார்கள். அந்நூல் வேண்டும் என்றேன், அதற்குள் வாய்ப்பில்லாமல் சிவனடி சேர்ந்து விட்டார்கள். இலக்கண இலக்கியப் பணியோடு நல்ல ஆய்வாளராகத் திகழ்ந்த வெள்ளை வாரணனார் அவர்கள் தமிழக அரசின் பாராட்டிற்கும் உரியவரான செய்தி வியப்பிற்குரியதன்று. சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பணிசெய்த பேராசிரியரின் நினைவு, தமிழ் உலகத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு.* (994)

*பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்* (996)

# ஒருநாள் சிகரம் அடைந்திடலாம் !

கவிஞர் அ. கனகசபாபதி, எம்.ஏ., பி.எட்.,

மனதில் அன்பை விதைத்துவிடு! - அது
மனித நேயத்தின் மரமாகும்!
மலரும் மலர்களை உற்றுப்பார்! - உன்
மலரும் முகத்திற்கு அடிகோலும்!

இதழில் புன்னகை சிந்திவிடு! - அது
இனிய உறவை வளரவிடும்!
இனிதாய் என்றும் பேசிவிடு! - வரும்
இன்னல்கள் தூர விலகிவிடும்!

கண்ணில் கருணையை காட்டிவிடு - அது
கனிவை மனதில் வளர்த்துவிடும்!
மண்ணில் வாழும் ஏழையர்க்கு - நீ
மரநிழலாய் இருந்து காத்துவிடு!

புண்ணியம் வந்து உனைச்சேரும்! - நீ
எண்ணிய கருமங்கள் ஈடேரும்!
கண்ணியம் மிக்க வாழ்ந்திடலாம்! - வரும்
காலம் உன்னை வாழ்த்திவிடும்!

அன்பை இலவசமாய் வழங்கிவிடு! - அது
பண்பையும் பாசத்தையும் வளர்த்துவிடும்!
வம்பை விலைகொடுத்தேனும் விலக்கிவிடு! அதனால்
உன்கை நன்றாய் ஓங்கிவிடும்!

பாதை மாறிப் போவதனால்! - செல்லும்
பயணம் ஒன்றும் முடியாது!
உழைத்தே என்றும் வாழ்ந்திட்டால்! - நீ
ஓர்நாள் சிகரம் அடைந்திடலாம்!

# செந்தமிழ் திங்களிதழ் ஓராண்டு ஓர் ஆய்வும், கவிவேந்தர் கா. வேழவேந்தன் பங்களிப்பும்

டாக்டர் வ.க. கன்னியப்பன்

| கட்டுரையாளர்கள் / கவிஞர்கள் | அக்டோபர் 2011 | நவம்பர் 2011 | டிசம்பர் 2011 | சனவரி 2012 | பிப்ரவரி 2012 | மார்ச் 2012 | ஏப்ரல் 2012 | மே 2012 | சூன் 2012 | சூலை 2012 | ஆகஸ்ட் 2012 | செப்டம்பர் 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி.நாகசுந்தரம் | 1 | 1 | | | | | | | | | | |
| கா.வேழவேந்தன் | 1 | | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| அ.ஜம்புலிங்கம் | 1 | | | | | | | | | | | |
| வை.சந்திரசேகர் | 1 | | | | | | | | | | | |
| க.முருகேசன் | | 1 | 1 | | | | | | | | | |
| வெ.பெருமாள்சாமி | | 1 | | | 1 | | | | | | | 1 |
| தா.குருசாமி தேசிகர் | | 1+1 | | | 1 | | | 1 | | | 1 | 1 |
| சுப.அண்ணாமலை | | 1 | | | | | | | | | | |
| ச.வனிதா | | 1 | | | | | | | | | | |
| பெ.முருகலெட்சுமி | | 1 | | | | | | | | | | |
| கு.விஜயகுமார் | | | 1 | | | | | | | | | |
| ஆறுவிரல் ஐம்பொறி | | | 1 | | 1 | | 1 | 1 | | 1 | 1 | 1 |
| த.செந்தமிழ்ச்செல்வன் | | | 1 | | | | | | | | | |
| இரா.கலைச்செல்வி | | | 1 | | | | | | | | | |
| கா.அரங்கசாமி | | | 1 | | | 1 | | | | | | |
| சி.பாண்டுரங்கன் | | | 1 | | 1 | | | | | 1 | | |
| சி.ஆறுமுகம் | | | 1 | | | | | | | | | |
| அ.கனகசபாபதி | | | 1 | 1 | | | | 1 | | | | |
| மு.மீனா முதல்வர் | | | | 1 | | | | | | | | |
| தெ.முருகசாமி | | | | 1 | | | | | | | | |
| என்.ஆசாதேவி | | | | 1 | | | | | | | | |
| பா.வாணிஸ்ரீ | | | | 1 | | | | 1 | | | | |
| இ.கி.ராமசாமி | | | | 1 | 1 | | | | | | | |
| பெ.பேபி | | | | | 1 | | | | | | | |
| அ.ரஜினி | | | | | 1 | | | | | | | |
| மா.செயசந்திரன் | | | | | | 1 | | | | | | |
| யாழ்.சு.சந்திரா | | | | | | 1 | | | | | | |
| கு.வேலன் | | | | | | 1 | | | | | | |
| நே.க.ஹேம்லின் ஐடா | | | | | | 1 | | | | | | |
| கி.இராசா | | | | | | 1 | 1 | | | | | |
| பா.வளன் அரசு | | | | | | | 1 | | | | | |
| ஆ.திருமேனி | | | | | | | 1 | | | | | |
| வி.ரேணுகாதேவி | | | | | | | 1 | | | | | |
| மா.இராமச்சந்திரர் | | | | | | | 1 | | | | | |
| ஆதி.பாலசுந்தரன் | | | | | | | 1 | | | 1 | | |
| எஸ்.பாலாம்பிகை | | | | | | | | 1 | | | | |
| ந.விஜயபாலன் | | | | | | | | 1 | | | | |
| வை.பூ.சோமசுந்தரம் | | | | | | | | 1 | | | | |
| பொ.திராவிடமணி | | | | | | | | 1 | | | | |
| மு.முத்தையா | | | | | | | | | 1 | | | |
| சி.பாக்கியராஜ் | | | | | | | | | 1 | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெ.சஞ்சீவராயன் | | | | | | | | | 1 | | | |
| இ.ரஞ்சிதகுமார் | | | | | | | | | 1 | | | |
| மு.சன்னாசி | | | | | | | | | 1 | | | |
| சா.பன்னீர் செல்வம் | | | | | | | | | | 1 | 1 | |
| க.சாந்தி | | | | | | | | | | | 1 | |
| பி.ஆறுமுகம் | | | | | | | | | | | 1 | |
| சமுத்திரமணாளன் | | | | | | | | | | | 1 | |
| ந ஞானசேகரன் | | | | | | | | | | | 1 | |
| வெ.நடராசன் | | | | | | | | | | | | 1 |
| ம.யாழினி | | | | | | | | | | | | 1 |
| வ.சேகர் | | | | | | | | | | 1 | | |
| ப வேல்முருகன் | | | | | | | | | | 1 | | |
| க.அன்பழகன் | | | | | | | | | | 1 | | |

அக்டோபர் 11லிருந்து செப்டம்பர் 12 வரையுள்ள செந்தமிழ் திங்கள் இதழ்கள் பனிரெண்டும் வாசிக்கும் வாய்ப்புப் பெற்றேன். இதில் 54 தகைசார்ந்த தமிழறிஞர்கள், கவிஞர்கள், புலவர்களால் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அதிகபட்சமாக கவிவேந்தர் கா. வேழவேந்தன் 10 கவிதைகள் எழுதியிருக்கிறார். ஆறுவிரல் ஐம்பொறி என்பர் 7 கட்டுரைகளும், தா. குருசாமி தேசிகர் 5 கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்கள்.

கடந்த 12 செந்தமிழ் இதழ்களிலும் அதிகமாக 10 கவிதைகள் எழுதி வெளியாகியுள்ள கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் கவிதைகள் அனைத்துமே மிக சிறப்பானவை. நான் வாசித்து மகிழ்ந்த அக்கவிதைகளிலுள்ள சிறந்த கருத்துக்கள் பற்றி பெருமையுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

முதலில் ஈடில்லாக் குறள் என்ற கவிதையில், குறள் நெறி பரவி, குறள் மணம் நிறைந்து, குறள் அறம் பெருகி, குறள் வழி தழைத்தால் குற்றங்கள் கிடையாது. குடும்பத்தில் சிக்கல் இல்லை. கோலாட்சியில் ஊழல் ஏதுமிருக்காது. குடிப்புகழில் தாழ்வில்லாது ஏற்றமிருக்கும் என்று உறுதிபடச் சொல்கிறார். என்னாட்டுக் குடிமக்களுக்கும், எக்கால மாந்தருக்கும், என்னாளும் பொருந்தும் வண்ணம் இயற்றிய பொதுநூல் திருக்குறள் என்றும் அக்டோபர் 11 செந்தமிழ் இதழில் இக்கவிதையின் வாயிலாக கவிவேந்தர் கா. வேழவேந்தன் வலியுறுத்துகிறார்.

வாழ்க்கைக் கணக்கு என்ற அருமையான கவிதையை செந்தமிழ் டிசம்பர் 2011 இதழில் தருகிறார் கவிவேந்தர். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்று ஒவ்வொரு இனத்திலும் ஆறு செய்திகளைக் கூறுகிறார். சோம்பலைத் தவிர்த்து சுறுசுறுப்பாக இருங்கள் என்றும், நல்லுழைப்பைக்

கூட்டி நரித்தனத்தைக் கழியுங்கள் என்றும், கல்வியினைப் பெருக்கி பயன்வாழ்வை வகுத்திடச் சொல்கிறார். புன்னகையையும், இன்சொல்லையும் கூடடினால் மாட்சி கிட்டும் என்றும் கவிவேந்தர் வலியுறுத்துகிறார்.

கவிவேந்தர், தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவது பற்றிய மனவருத்தத்தையும், தமிழைப் போற்ற வேண்டிய அவசியம் பற்றியும் செந்தமிழ் சனவரி 12 இதழில் தமிழா ! எங்கே போகிறாய்? என்ற கவிதையின் மூலமாக எடுத்துச் சொல்கிறார். பள்ளி, கல்லூரிகளில் உயிர்த்தமிழ் மொழியில் பாடம் கற்க வேண்டும் என்றும், நீதிமன்றங்களில் தமிழில் வாதம் செய்தல் அவசியமென்றும், கோயில்களிலெல்லாம் தழிழில் அர்ச்சனை செய்தல் வேண்டும் என்றும் விரும்பி இயம்புகின்றார். இசையரங்குகளில் தமிழிசை வளர வேண்டுமென்றும், சேய்களின் பெயரையெல்லாம் தமிழ் மணக்கும் வண்ணம் அமையப்பெற வேண்டுமென்றும் கூறுகிறார். தாய்மொழி போற்றும் நாடே தரணியில் உயரும் என்றும் கவிவேந்தர் கூறுகிறார்.

வெள்ளையரின் காலத்தில் மதுரை வந்த காந்தி வறுமையில் வாடும் மக்கள் எளிய உடை அணிந்திருப்பது கண்டு, தானும் ஆடம்பர உடையைத் துறந்து ஒரே வேட்டி கட்டி மேல் துண்டு மட்டும் அணிந்து வாழ்ந்தது அனைவரும் அறிந்ததே. இலண்டன் சென்று அரசரைச் சந்தித்த போதும் அவ்வாறே சென்றார். சர்ச்சிலைச் சந்திக்கச் சென்றபோது,

> தழயூன்றும் காந்திக்கேன் அஞ்சு கின்றீர்!
> சர்ச்சிலினைக் கேட்டார்கள்; அவரும் சொன்னார்;
> நெடுங்கூர்வாள் ஏந்தி அந்தக் காந்தி வந்தால்,
> நேர்நின்றே துப்பாக்கி கொண்ட ழிப்பேன்;
> கொடும்பீரங் கிகொண்டே எதிர்த்தி ருந்தால்,
> கொன்றிருப்பேன் அணுகுண்டால்! அவர்க ரத்தில்
> எடுத்திருக்கும் 'அகிம்சை'எனும் ஆயு தத்தை
> எதிர்கொள்ள நம்கையில் ஏது மில்லை!

என்று அகிம்சையின் பெருமையை செந்தமிழ் மார்ச் 12 இதழில் காந்தியைக கண்டு கதிகலங்கிய சர்ச்சில் ! என்ற அருமையான கவிதையில் கவிவேந்தர் மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

நம் நாட்டில் நடக்கும் பலவித அவலங்களைச் சுட்டிக் காட்டி, அவற்றிற்கு விடிவு ஏற்படாதா என்ற தனது ஏக்கங்களை செந்தமிழ் ஏப்ரல் 12 இதழில் ஏக்கங்களின் தாக்கங்கள் என்ற கவிதை வழியாக கவிவேந்தர் வேதனைப்படுகிறார். குறிப்பாக, மக்கட் பெருக்கத்தைப் பற்றிய கவலையைத் தெரிவிப்பதுடன், அறிவியலில் உயர்ந்து நாம் பாராட்டப்படவும் வேண்டும் என்று விழைகிறார்.

**'நாற்றங்கால்' போல்நெருக்கக் குழப்பம் இன்றி**
**'நாம் இருவர் நமக்கொருவர்' நிலைவா ராதா? என்றும்,**

**வீதிக்கு வீதியிங்கே கட்சி வைத்து**
**விழலுக்கே நீர்இறைக்கும் நிலைமா றாதா?**
**சாதிவெறி, வேற்றுமைகள், மாயை யெல்லாம்**
**தவிடுபொடி யாய்மாறிப் பறந்தி டாதா? என்றும்,**

நாட்டில் பல கட்சிகள் உருவாவது விழலுக்கு நீரிறைக்கும் செயலாகும். சாதிவெறி, வேற்றுமைகள் தவிடுபொடியாக வேண்டும் என்றும் கவிவேந்தர் கருத்துரைக்கிறார்.

செந்தமிழ் மே 2012 திங்கள் இதழில் இலக்கிய இலக்கு என்ற கவிதையில் கவிவேந்தர், பெண்களையும், காதலையும் மையமாகக் கொண்டு புனையும் கவிதைகளை விடுத்து, அற்புதமான, நெடும்புதுக் கருத்துக்கள் கொண்ட நல்ல நூல்கள் தமிழில் வரவேண்டும். கவிஞர்களும், அறிஞர்களும் எழுத வேண்டும் என்பதை,

**மையமலை 'மயி'லே என்றும்**
**...'மானெ'ன்றும், குயிலே என்றும்**
**ஒய்யார 'அன்ன' மென்றும்**
**...ஓயாமல் சொன்ன தெல்லாம்**
**ஐயய்யோ போதும், போதும்!**
**...ஆக்கங்கள் சேர்ப்ப தற்கு**
**நெய்கின்ற கவிதைக் குள்ளே**
**...நெடும்புதுக் கருத்தே தேவை!**

என்றும் சொல்கிறார்.

செந்தமிழ் சூன் 12 இதழில் வெளியான இளைஞர்களே விழிமின் என்ற கவிதையில் நாளை ஏட்டை எழுத வந்த கனவுகளே ! நல்ல விஞ்ஞான விடியலுக்கே வெள்ளி நீங்கள்! களை போன்று கிளைத்திருக்கும் சாதி பேதக் காடுகளை எரிக்க வந்த பிழம்பு நீங்கள் என்றும் கவிவேந்தர் இளைஞர்களுக்கு நல்வழி காட்டுகிறார். அனைவரிடத்தும் பாசம் என்னும் பந்தநீர் ஊற்றுங்கள் என்றும், நலிந்தோர் துயர் துடைக்க உதவுங்கள் என்றும் பலவாறாக இளைஞர்களே விழிமின் என்று நற்கருத்துக்களைக் கூறி உற்சாகப்படுத்துகிறார்.

செந்தமிழ் ஜுலை 12 இதழில் வெளியான வாழ்வோர் யார்? என்ற கவிதையில் பலர்க்குதவி செய்து, பழுதில்லாமல் வாழவேண்டுமென்றும், நல்ல சொற்கள் வைக்கின்ற நடுகல் தான் ஒருவர்க்கு மிஞ்சும் சொத்து என்றும் கவிவேந்தர் கூறுகிறார். தேவைக்கு எவ்வளவோ அவ்வளவு மட்டும் வைத்து, இருப்பதனை அறப்பணிக்குத் தந்து, இறந்துமிங்கே வாழ்வோரே வாழ்வோர் என்றும் உறுதியாகச் சொல்கிறார்.

செந்தமிழ் ஆகஸ்டு 12 இதழில், வியப்பூட்டும் சாதனைகள் புரிந்த வித்தகர் விஸ்வேஸ்வரய்யா அவர்களின் சாதனைகளும், பெருமைகளும் சொல்லி அவரது நூறாண்டு வாழ்வின் ரகசியம் பற்றியும் அவரே கூறுவதாக எமனையே ஏமாற்றிய ஏந்தல் என்ற கவிதையில் கவிவேந்தர் கூறுகிறார். எத்தனையோ நீர்த்தேக்கத் திட்டங்களும், மைசூரில் அரிய பல்கலைக்கழகமும் ஏற்பட பேருதவி செய்தவர். அவருடைய சேவைக்கு பாரத ரத்னா விருது பெற்றவர்.

ஒரு பத்திரிக்கையாளர் பேட்டியில் விஸ்வேஸ்வரய்யா அவர்களிடம் எமனை நீங்கள் நயமாக ஏமாற்றும் வழிதான் என்ன? என்று கேட்டதற்கு, எமன் என்னைக் கொண்டு செல்ல வரும் பொழுதெல்லாம் என் பணியில் மும்முரமாய் இருப்பது கண்டு, இன்னொரு நாள் வருவோம் என்று போய்விடுவான் என்பாராம்; என் உழைப்பே என் உயிரை நின்று காக்கும் என்பாராம்; இதுதான் பேருழைப்பின் மாட்சி என்று கவிவேந்தர் வேழவேந்தன் கூறுகிறார்.

செந்தமிழ் செப்டம்பர் 12 இதழில் சீன அறிஞரின் தீரா நூல் மோகம் ! என்ற கவிதையில் சீனத்தின் யுவான் சுவாங்கின் நூல் மோகம் பற்றிய செய்தியை கவிவேந்தர் கூறுகிறார். பல நாடுகள் பயணம் மேற்கொண்ட யுவான் சுவாங் இந்தியா வந்து சேர்ந்தார்.

வரலாற்றால், பண்பாட்டால், மாவீரத்தால்
மாட்சியுற்ற நம்நாட்டின் பெருமை யெல்லாம்
நிரல்நிரலாய்க் குறிப்பேட்டில் ஏற்றிக் கொண்டார்;
நெஞ்சினிக்கும் சுவடிகளைத் திரட்டிக் கொண்டார்;

என்று கவிவேந்தர் கூறுவதுடன், யுவான் சுவாங் தம் நாடு செல்ல, வழியில் இருந்த நதியைக் கடக்க ஓடத்தில் செல்லும் போது, பாரம் தாங்காமல் ஓடம் தத்தளித்தது. படகோட்டி யுவான் சுவாங்கிடம் பாரம் குறைக்க சுவடிகள் மூட்டையைத் தண்ணீரில் எறியச் சொன்னாராம். அதற்கு அவர், தானே ஆற்றில் குதித்து ஓடத்துடன் நீந்தி வந்து கரை சேர்ந்தாராம். இதன் மூலம் சீன அறிஞர் யுவான் சுவாங்கின் தீராத நூல் மோகம் எத்தகையது என்பதை நாம் உணரலாம்.

கவிவேந்தர் வேழவேந்தன் அவர்களின் பங்களிப்பு தமிழ் இலக்கிய திங்கள் இதழ்களாகிய செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ் மாருதம் ஆகியவைகளில் பெரும்பாலும் ஒவ்வொரு இதழ்களிலும் நல்ல நல்ல கருத்துக்களில் வெளியாவது கண்டு, வாசித்து மிக மகிழ்கிறேன். அவரின் தமிழ்த்தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது.

---

## வாசகர் வாசகம் (1)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். செந்தமிழ் சூன் 2013 இதழ் கண்டேன். அறுசுவைப் பண்டமென எழுவகைக் கட்டுரைகள் சுடரென மின்னுகின்றன. கா. வேழவேந்தன் எழுதியுள்ள மரபுகளே என்றென்றும் வாழும் நிற்கும் என மரபுக் கவிதைகளே திருப்புகழ் குறவஞ்சிபோல இறவாது நிற்கும் எனும் கவிதை மிக அருமை. கம்பரின் அறிவியல் சிந்தனைகள் கட்டுரை புதிய கோணத்தில் பார்க்கப்பட்டுள்ளது. உலகை வெப்பமயமாதல் உந்தம் மாறாக் கோட்பாடு போன்றவைகளைத் தமிழ் இலக்கியங்களே பன்னூறாண்டுக்கு முன் பாடியுள்ளன என்பதை எண்ணும் போது தமிழனென்று சொல்லடா ! தலைநிமிர்ந்து நில்லடா ! எனப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. செந்தமிழ் வளர்க !

அன்புடன்,

**ந. பாண்டுரங்கன்**, மதுரை – 16

# யார் நல்லாசிரியன்?

டாக்டர் வ. க. கன்னியப்பன்

இன்றைய சூழ்நிலையில் தனியார் மற்றும் அரசு கல்விக் கூடங்கள், தொழில் சார்ந்த பள்ளிகள், கல்லூரிகள் பல்வேறு நிலைகளில் பெருகியுள்ளன. அவற்றிற்கான ஆசிரியப் பள்ளிகளும், ஆசிரியத் தேவைகளும் பெருகி விட்டன. ஆயிரக்கணக்கான பேர், ஆண்களும், பெண்களும் போட்டித் தேர்வுகள் எழுதிப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அனைவருமே மாணவ மாணவியர்க்கு கல்வி கற்பிக்கத் தகுதியும், திறமும் படைத்தவர்கள்தானா என்பது ஒரு கேள்விக்குறி.

வருடந்தோறும் அரசாங்கத்தால் நல்லாசிரியர் விருது பலருக்கும் வழங்கப்படுகிறது. யார் நல்லாசிரியன், அவரது குணாதிசயங்கள் எத்தன்மையதாக இருக்க வேண்டும் என்று நன்னூலில் கூறப்பட்டிருக்கிறது.

## நல்லாசிரியனின் இலக்கணம்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே - (பாடல் 26)

## பதவுரை

குலன் – உயர்குடிப்பிறப்பும்

அருள் – ஜீவகாருண்யமும் (உயிர்களிடத்தில் அன்பும்)

தெய்வம் கொள்கை – கடவுள் நம்பிக்கையும், வழிபாடும்,

மேன்மை – பெருந்தகைமையும்

கலைபயில் தெளிவு – பல நூல்களில் பயின்ற தேர்ச்சியும்

கட்டு உரை வன்மை – மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி, தொடுத்துச் சொல்லுகின்ற சொல்வன்மையும் (கற்றுத்தரும் வல்லமை)

நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும் – பூமியையும் மலையையும் தராசு கோலையும் பூவையும் ஒத்த உயர்ந்த குணங்களும்,

உலகு இயல் அறிவோடு – உலகத்தில் உள்ள நன்மை தரும் செயல்களை அறிந்திருக்கின்ற அறிவுடனும்,

உயர் குணம் இனையவும் – இவை போன்ற மிக உயர்ந்த குணங்கள் அனைத்தும் சேர்ந்து,

அமைபவனே – பொருந்தியிருக்கப் பெற்றவனே,

நூல் உரை ஆசிரியன் – நூலைக் கற்பிக்கும் நல்லாசிரியனாவான்.

## கருத்துரை

உயர்குடிப்பிறப்பும், உயிர்களிடத்தில் அன்பும், கடவுள் நம்பிக்கையும் வழிபாடும், இவைகள் அளித்த பெருந்தன்மையான குணமும், பல நூல்களில் பயின்ற தேர்ச்சியும், மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி, தொடுத்துச் சொல்லுகின்ற (கற்றுத்தரும் திறனும்) சொல்வன்மையும், பூமியையும் மலையையும் தராசு கோலையும் பூவையும் ஒத்த உயர்ந்த குணங்களும், உலகத்தில் உள்ள நன்மை தரும் செயல்களை அறிந்திருக்கின்ற அறிவும், இவை போன்ற மிக உயர்ந்த குணங்கள் அனைத்தும் சேர்ந்து பொருந்தியிருக்கப் பெற்றவனே நூலைக் கற்பிக்கும் நல்லாசிரியனாவான்.

## நல்லாசிரியனின் குணாதிசயங்களுடன் நிலம், மலை, நிறைகோல், மலர் மாட்சி உவமை

நல்லாசிரியனின் குணாதிசயங்கள் எத்தன்மையுதாக இருக்க வேண்டும் என்று நன்னூலில் கூறப்பட்டிருக்கிறது. அதில் நிலமலை நிறைகோள் மலர்நிகர் மாட்சியும் நல்லாசிரியனுக்கு அமையப்பட வேண்டிய குணமாக சொல்லப்படுகிறது. எனவே நிலம், மலை, நிறைகோல், மலர் மாட்சி என்னவென்றும், அவைகள் நல்லாசிரியனுக்கு, எங்ஙனம் உவமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் கீழேயுள்ள பாடல்களில் காண்போம்.

### நிலமாட்சி

தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே – (பாடல் 27)

## பதவுரை

தெரிவு அரு - ஓரிடத்தில் நின்று நிலம் முழுவதும் காண்பதற்கு ஏதுவான அருமையான,

பெருமையும் – நிலப் பரப்பின் (உருவப் பரப்பின்) பெருமையும்,

திண்மையும் - உழுவதற்குத் தோதான மனிதர்கள், கலன்கள், எருதுகள் ஆகியவை பாரமாகத் தன் மேல் அழுந்தினாலும் கலங்காத வலிமையும்,

பொறையும் - தன்னைப் பண்படுத்த மனிதர் ஆழ உழ, தோண்ட முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும்,

பருவம்முயற்சி அளவின் பயத்தலும் - தக்க பருவத்திலே உழவர் செய்கின்ற முயற்சி அளவுக்குத் தகுந்தபடி அவர்க்குப் பயன் கொடுத்தலும்.

நல் நிலம் மருவிய மாண்பு ஆகும் - நல்ல நிலத்திற்குப் பொருத்தமான நற்குணங்களாகும்.

## கருத்துரை

ஓரிடத்தில் நின்று நிலம் முழுவதும் காண்பதற்கு ஏதுவான அருமையான நிலப் பரப்பின் (உருவப் பரப்பின்) பெருமையும், உழுவதற்குத் தோதான மனிதர்கள், கலன்கள், எருதுகள் ஆகியவை பாரமாகத் தன் மேல் அழுந்தினாலும் கலங்காத வலிமையும், தன்னைப் பண்படுத்த மனிதர் ஆழ உழ, தோண்ட முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும், தக்க பருவத்திலே உழவர் செய்கின்ற முயற்சியளவுக்குத் தகுந்தபடி அவர்க்குப் பயன் கொடுத்தலும் நல்ல நிலத்திற்குப் பொருத்தமான நற்குணங்களாகும்.

அதுபோல, பிறரால் வகுத்து அறியப்படாத கல்வியறிவும் பெருமையும், பெரிய வாதம் செய்து பிறர் தன் மேல் நெருக்கினாலும் கலங்காத வல்லமையும், அடுத்தவர் தன்னை இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், மாணவர்கள் செய்யும் முயற்சியின் அளவிற்குத் தகுந்தபடி அவர்களுக்குப் பயனைத் தருதலும் ஆசிரியனுக்குப் பொருந்தும் குணங்களாதலால், நிலம் அவனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## மலைமாட்சி

**அளக்க லாகா வளவும் பொருளுந்**

**துளக்க லாகா நிலையுந் தோற்றமும்**

**வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே – (பாடல் 28)**

## பதவுரை

அளக்கல் ஆகா – அளக்க முடியாத

அளவும் – அதன் முழு வடிவத்தின் அளவும்,

பொருளும் – அம்மலையில் உள்ள பல்வகைப் பொருள்களும்,

துலக்கல் ஆகா நிலையும் – எவ்வளவு வலிமை உடையவர்களாலும் அசைக்க முடியாத உருவத்தின் நிலைமையும்

தோற்றமும் - நெடுந்தொலைவிலிருந்தும் காணப்படுகின்ற உயரமும்,

வறப்பினும் வளம் தரும் வண்மையும் - மழையே இல்லாமல் வறண்டு போனாலும் மலையிலுள்ள மரங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும்

மலைக்கே – மலைக்கே உள்ள நற்குணங்களாகும்.

## கருத்துரை

அளக்க முடியாத அதன் முழு வடிவத்தின் அளவும், அம்மலையில் உள்ள பல்வகைப் பொருள்களும், எவ்வளவு வலிமை உடையவர்களாலும் அசைக்க முடியாத உருவத்தின் நிலைமையும், நெடும் மலையிலுள்ள மரங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும் மலைக்கே உள்ள நற்குணங்களாகும்.

அதுபோல, அளவு காணமுடியாத கல்வியினளவும், பலவகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையவராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலையும், நெடுந்தூரத்தில் உள்ளோராலும் அறியப்படும் உயர்வும், பொருள் வருவாய் குறைந்தாலும் தன்னைச் சார்ந்துள்ள மாணவர்களுக்கு கல்வியை குறைவிலாது கொடுக்கும் கொடையும் ஒரு நல்ல ஆசிரியர்க்கு உள்ள குணங்களாகும். எனவே, மலை ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## நிறைகோல்மாட்சி

ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்

மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே - (பாடல் 29)

## பதவுரை

பொருளை ஐயம் தீர உணர்த்தலும் - நிறுக்கப்பட்ட பொருளின் அளவைச் சந்தேகம் தீரக் காட்டுதலும்

மெய் நடு நிலையும் - உண்மை பெறத் தான் இரண்டு தட்டுக்கும் நடுவே ஒருபக்கம் கோணாமல் நிற்றலும்,

நிறைகோற்கு மிகும் - நல்ல தராசுகோலுக்கு உண்டான மிக்க நற்குணங்களாகும்.

## கருத்துரை

நிறுக்கப்பட்ட பொருளின் அளவைச் சந்தேகம் தீரக் காட்டுதலும், உண்மை பெற, தான் இரண்டு தட்டுக்கும் நடுவே ஒருபக்கம் கோணாமல் இருத்தலும் நல்ல தராசுகோலுக்கு உண்டான நற்குணங்களாகும்.

அதேபோல், தான் நூல்களில் கற்ற பாடங்களிலிருந்து கேட்கப்பட்ட சொற்பொருளின் இயல்பை சந்தேகம் தீர விளக்கி உணர்த்தலும், புலவர் இருவர் மாறுபட்டாராயின் உண்மையைப் பெற தான் அவ்விருவர்க்கும் நடுவாகப் பாரபட்சமின்றி நிற்றலும் நல்ல ஆசிரியர்க்கு உள்ள குணங்களாகும்.

மாணவர்கள் பலருள் ஒருவனிடத்து விருப்பாகவும், ஒருவனிடத்து வெறுப்பாகவும் இல்லாமல் ஆசிரியர் நடுவுநிலையாக இருக்க வேண்டும். எனவே, நிறைகோலை ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## மலர்மாட்சி

மங்கல மாகி யின்றி யமையாதது

யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்

பொழுதின் முகமலர் வுடையது பூவே - (பாடல் 30)

## பதவுரை

மங்கலம் ஆகி – சுபகாரியங்களுக்கு உரியதாய்,

இன்றி அமையாது – அலங்கரிப்பதற்கு அ வை இல்லாமல் முடியாததாய்,

யாவரும் மகிழ்ந்து மேல் கொள – காண்பவரெல்லாம் விரும்பி, மகிழ்ந்து கூந்தலிலும், கழுத்திலும் மேலாகத் தன்னைச் சூடிக் கொள்ள,

மெல்கி – மென்மையான குணமுடையதாய்,

பொழுதில் முகம் மலர்வு உடையது – மலர்வதற்கு உரிய நேரத்தில் மலரக்கூடிய வண்ணம் தோற்றமுடையது.

பூவே – பூவின் குணமாகுமாம்.

## கருத்துரை

அலங்கரிப்பதற்கு (இல்லாமல் முடியாத) முக்கியத்தவம் வாய்ந்ததாகவும், காண்பவரெல்லாம் விரும்பி, மகிழ்ந்து கூந்தலிலும், கழுத்திலும் மேலாகத் தன்னைச் சூடிக் கொள்ள மென்மையான குணமுடையவனாகவும், பாடம் சொல்லுவதற்குரிய காலத்தில் முகமலர்ச்சி உடையவனாகவும் இருப்பது ஆசிரியனுக்கு மேலான குணமாதலால், பூ ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

அதேபோல், சுபகாரியத்திற்கு உரியவனாய்ச் சிறப்பிக்க, தான் இல்லாமல் யாதொரு செய்கையும் முடியாததாகக் காண்பவரெல்லாம் விரும்பி மேலான நிலையில் தன்னை வைத்துக் கொள்ள மெல்லிய குணமுடையவனாகவும், பாடம் சொல்லுவதற்குரிய காலத்தில் முகமலர்ச்சி உடையவனாகவும் இருப்பது ஆசிரியனுக்கு மேலான குணமாதலால், பூ ஆசிரியனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

## முடிவுரை

இன்று ஆசிரியத் தொழில் செய்பவர்களும், நல்லாசிரியர் விருது பெறுபவர்களும் ஆசிரியத் தொழிலுக்கு உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றுகிறோமா என்று தங்களுக்குத் தாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

# சிலப்பதிகாரத்தில் ஒருநாள்

கவிவேந்தர்
கா. வேழவேந்தன்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் – மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு !

என்று கொஞ்சுதமிழ்ப் பாடல்வரிகளால் நம் தாயகத்தின் பெருமையைப் பெருமிதத்துடன் கூறிக் கர்வப்பட்டான் மாக்கவி பாரதி.

அப்படி ஒரு பெருமிதம் எப்படி வந்தது அவனுக்கு?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், இந்த பூமிப்பந்தின் பல பகுதிகளில் வாழ்ந்த மாந்தர்கள் காட்டுமிராண்டிகளாய், நாகரிகமும் பண்பாடும் அறியாமல் வாழ்ந்த காலத்தில், இப்படி ஓர் அறநெறிப் பண்பாட்டுக் காப்பியம் இந்த மண்ணில் தோன்றியிருப்பது உலக அறிஞர்களை வியக்க வைக்கிறது.

உலகமகா காவியங்களெல்லாம் உப்பரிகையிலே வாழ்ந்த மன்னர்களையும், ஒயில் அரசிகளையும் சுற்றியே வலம் வந்து கொண்டிருந்த போது, அரசமரபிலே பிறந்த இளங்கோவடிகள்தாம் எங்கோ புகார்நகரின் ஒரு பகுதியிலே வாழ்ந்த எளிய குடிமக்களான கண்ணகியையும் கோவலனையும் காவிய மாந்தர்களாக ஆக்கி நடமாடவிட்ட புரட்சிக் காப்பியமே சிலப்பதிகாரம்.

அரசியலில் பிழை செய்தோர்க்கு, அறமே கூற்றாகித் தண்டனை வழங்குவதும், அரிய கற்பெனும் பொற்புடைய பத்தினிப் பெண்டிரை ஆன்றோர் போற்றுதலும், முற்பகல் செய்யும் தீமை பிற்பகலிலேயே வந்து பாடம் புகட்டுவதும் இந்த அற்புதக் காப்பியத்தின் கருப்பொருள்களாக அமைத்து அறநெறிகளை வலியுறுத்துகின்றன.

ஒப்பரிய இந்த மாகாவியத்தின் ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகளுமே நம்மைப் புல்லரிக்க வைத்தாலும் வழக்குரை காதையில் இளங்கோவடிகள் தீட்டிக் காட்டுகின்ற, காவியத் தலைவி கண்ணகி நீதி கேட்டு வாதாடும் அந்த ஒரு நாள் காட்சிதான் நம்மை மிகவும் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இந்த வையகத்தில் நீதிக்கான ஆதாரங்களுடன் வாதாடி தன் வழக்கில் வெற்றி கண்ட முதல் பெண் வழக்கறிஞர் வீரமங்கை கண்ணகியே என்பதற்கு அருமையான சான்றாகத் திகழ்வது அந்த ஒரு நாள் நிகழ்வுகளே.

இன்றைய துப்பறியும் புதின ஆசிரியர்கள் நுணுக்கமான சிந்தனையுடன் நடந்துவிட்ட குற்றத்திற்கான ஆதாரச் சாட்சியம் திரட்டுவது போல், அன்றே ஓர் ஒற்றைச் சிலம்பை எடுத்துப் போய், பாண்டிய மன்னரின் அரசவையையே அதிரச் செய்து வாதிட்ட கண்ணகியின் நுட்பமும் திட்பமும் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

கொண்ட கணவன் கொடுமையாகக் கொலை செய்யப்பட்டான் என்று அறிந்தவுடன் குமுறும் சீற்றத்தோடு நெடுஞ்செழியப் பாண்டியனின் அரண்மனை வாயில் வந்து கொதிப்புணர்வுடன் முழங்குகிறாள் கண்ணகி. இதோ அந்த இடியோசை:

வாயிலோயே! வாயிலோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப்பாயே, அறிவிப்பாயே!

என்று கம்பீரக் குரல் கொடுக்கிறாள் அவள்.

அறிவை அடியோடு இழந்து விட்ட இறைமுறை தவறிய அரசனின் வாயில் காப்பவனே! கணவனை இழந்த காரிகையொருத்தி இணை இல்லாத ஒற்றைச் சிலம்புடன் கடைவாயிலில் நிற்கிறேன் என்று கூறு! எனும் கண்ணகியின் இந்த நெருப்புத் தொடர்கள் அத்தலைவியின் ஆவேச உணர்வை வெளிப்படுத்துவதுடன், அவள் தொடுக்கப்போகும் வழக்கின் விவரத்திற்குத் தெளிவாகக் கட்டியம் கூறுகின்றன.

புயலாக வந்துநின்ற பூவை கண்ணகியிடம்,
"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடி"

என்று வினவுகிறான் தென்பாண்டி மன்னன்.

தேரா மன்னா! செப்புகிறேன் கேள். இமையவர்களே வியக்கும் வண்ணம் ஒரு புறாவுக்காகத் தன் தசையையே வெட்டித் தந்த ஈடிலாச் சோழன் ஒருவனும், கன்றை இழந்த பசுவொன்றின் கண்ணீரைத் துடைக்க தன் சொந்த மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற இன்னொரு சோழனும் வாழ்ந்து பெருமை சேர்த்த புகார்ப்பதிதான் என் பிறந்த நகரம் என்கிறாள் அத்தலைவி.

அன்றே கோணாது செங்கோல் ஓச்சிய சோணாட்டின் அருந்தமிழ் வேந்தர்களது பட்டியலை அணிவகுத்துக் காட்டுகிறாள் அந்த அறிவார்ந்த அரிவை.

அப்படி நீதி வழுவாத நேரிய சோழ மண்ணிலே இருந்து வந்த எங்களுக்குத்தான் பாண்டி மண்டலகத்தில் தீராத அநீதி இழைக்கப்பட்டு விட்டது என்று அழலாகச் சீறுகிறாள் அவள்.

கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று என்று வாதாடுகிறான் காவலன் நெடுஞ்செழியன்.

நற்றிறம் படராக் கொற்கை வேந்தனே ! கோவலன் கொணர்ந்த என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களை உடையது என்று கூறிய நங்கையிடம் காவலர் கைப்பற்றிய அச்சிலம்பைக் கொண்டு வந்து வைக்க, அந்தக் கற்புத் தெய்வம் அச்சிலம்பைத் தரை மீது வீசி உடைக்கிறாள்; அதில் இருந்த மாணிக்கப் பரல்கள் மன்னன் வாயை அடைக்கின்ற வகையில் அவன் முகத்தில் தெறித்தன என்று நேர்த்தியுடன் அக்காட்சியைத் தீட்டிக் காட்டுகிறார் இளங்கோ.

**பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட**
**யானோ அரசன்; யானே கள்வன்!**
**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**
**என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுளென**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே!**

என்று உணர்ச்சிமயமான சிலிர்ப்பூட்டும் வரிகளில் அந்த வரலாற்றுக் காட்சியை ஓவியமாக்குகிறார் காவிய ஆசிரியர்.

கொஞ்சமும் ஆராயாமல், ஒரு பொற்கொல்லன் சொற்கேட்டு, கோவலனைக் கொலைக்களத்திற்கு அனுப்பிய கொடுங்கோலனான நானா அரசன்; நானே கள்வன். இந்த மண்ணக மீது வழிவழி புகழோடு திகழ்ந்த தென்புலக் காவல்நெறி என்னால் பிழைகண்டது. ஆகவே என் ஆருயிர் அழிந்து போகட்டும் என்று ஆட்சிக் கட்டிலிலே இருந்து வீழ்ந்து மாள்கிறான் நெடுஞ்செழியன்.

ஒரு மாமன்னன், கோவலன் என்னும் ஒரு குடிமகனின் உயிரைப் பறித்ததற்காக, தன் அரிய உயிரையே பணயமாக்கி, சாய்ந்த செங்கோலை நிமிர்த்துகிறான்; நீதியை நிலைநாட்டுகிறான் என்று பெருமிதத்துடன் கூறுகின்றன இக்காவிய வரிகள்.

இதையொட்டி நடைபெறும் இன்னும் ஓர் அதிரவைக்கும் நிகழ்வு நம்மை வியப்பின் முகட்டிற்கே கொண்டு செல்கிறது.

> மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்
> கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்
> கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென்று
> இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி

என்று நெஞ்சை உலுக்கும் எதிர்பாராத நிகழ்வைக் காட்டுகிறார் இளங்கோ.

வளையாத செங்கோல் என்னால் வளைந்ததே என்று மன்னன் நெடுஞ்செழியன் மயங்கி வீழ்ந்து மாள்கிறான்; அத்தென்னவன் அருகிருந்த துணைவி கோப்பெருந்தேவி அக்காட்சி கண்டு நெஞ்சம் குலைகிறாள்; உடல் நடுங்குகிறாள். பின்னர்,

கணவனை இழந்தோர்க்கு இணையாக, இன்னொருவரைக் காட்ட இயலுமா? அண்ணன் மாண்டால், வேறொருவரைக் காட்டி, இவரை உன் அண்ணனாக ஏற்றுக்கொள் என்று கூற முடியும்; உற்ற தந்தை போய் விட்டால் இன்னொரு முதியவரைத் தந்தையாக ஏற்க இயலும். ஆனால் கணவனைப் பறிகொடுத்த காரிகைக்கு வேறொருவரைக் கணவனாகக் காட்ட இயலுமா? என்று கதறிக் கொண்டே அந்தக் கற்புத் தெய்வம் கோப்பெருந்தேவி அடுத்த நொடியே கணவனின் காலடியில் மயங்கி வீழ்ந்து மாள்கிறாள்.

எண்ணிப் பாருங்கள்.

அகில உலகத்தின் எந்தக் கோடியிலாவது இத்தகைய அற்புதக் காட்சிகள் அரங்கேறி இருக்கின்றனவா?

வையகத்தின் எந்த மொழி இலக்கியத்திலாவது இப்படிப்பட்ட ஈடில்லாப் பண்பாட்டுக் காட்சி ஓவியங்களைக் காண முடியுமா?

கட்டுப் பெட்டியாக வீட்டுள் அடைந்து கிடந்த ஓர் எளிய குடும்பப் பெண், தன் கணவன் வெட்டுண்டான் என்று கேள்விப்பட்டவுடன், காட்டாறாய் மாறி பாண்டியன் அரசவையுள் நுழைந்து கனல்பறக்கும் வாதத்தால் நீதியை நிலை நாட்டுவதும்,

தாழாத செங்கோல் என்னால் தாழ்ந்து விட்டதே என்று பதறித் துடித்து, தன் விலை மதிப்பற்ற உயிரையே நீதிக்காக விலை கொடுத்து அந்தத் தாழ்ந்த செங்கோலை நிமிர்த்திய நிகழ்வும்,

வீழ்ந்து மாண்ட மன்னனுக்குப் பின்னர், வேறு யார்துணை எனக்கு என்று அந்த நொடியே கணவன் இணையடியுடன் சாய்ந்து மடிந்த மேன்மைமிகு கற்பரசி கோப்பெருந்தேவியின் அற்புதப் பண்பாடும்,

வேறு எந்த மொழிக் காப்பியத்திலே காணமுடியும் ?

இப்படி ஒப்பரிய நிகழ்வுகளை நிரல் நிரலாக அணிவகுத்துக் காட்டும் வழக்குரை காதையின் இந்த ஒரு நாள் காட்சி ஓவியம் நெஞ்சைச் சிலிர்க்க வைக்கவில்லையா?

மாற்றான் மனைவியைக் கவர்ந்து செல்ல டிராய் நகரின் மீது மாப்போர் தொடுத்தவன் தான் மாவீரம் காட்டிய 'காவியத் தலைவன்'..................... அவனையும் காதலனாக ஏற்க முனைந்த ஆரணங்குதான் 'காவியத் தலைவி' என்றெல்லாம் காப்பியங்கள் தீட்டப்பட்ட காலத்தில், கற்பனைக்கும் எட்டாத கற்பரசிகளையும், சொற்களால் அடக்க முடியாத வண்ணம் தூய நீதிக்காக மடிந்த மாமன்னர்களையும் படம் பிடித்துக் காட்டும் செம்மாந்த சிலப்பதிகாரம், காப்பியம் கண்டு உலக மொழியியல் அறிஞர்கள் மூக்கில் மேல் விரல் வைத்து வியந்து நிற்கிறார்கள்.

அந்த மாபெரும் பண்பாட்டிலக்கியத்தின் சொந்தக் காரர்கள் என்று இறுமாப்புடன் மார்தட்டி நிற்கிறோம் நாம்.

வேறென்ன பெருமை நமக்கு வேண்டும் ?

# நற்றிணையில் வரலாற்றுச் செய்திகள்

இரா. ஜாக்குலின் இசபெல்லா

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணை, ஐந்திணை தழுவிய 400 பாடல்களைக் கொண்டது ஆகும். இது எட்டுத்தொகை நூல்களுள் முதன்மையாக கூறப்படும் பெருமை உடையது. இதனை நற்றிணை நானூறு என்றும் வழங்குவர். இந்நூல் 275 புலவர்களால் அகப்பொருளோடு கூடிய கொடை, ஆட்சிமுறை, ஆட்சி சிறப்பு, மன்னர்களின் போர், அன்பு, நட்பு மற்றும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளையும் பாடப்பட்டது இந்நூல். ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடிவரையுள்ள பாடல்களாகக் கொண்டு திகழ்கிறது. முதல் நாற்பது பாடல்களில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகள்.

**வல்வில் ஓரி கானம் நாறி** (பாடல் 6 வரி 9)

பாலைவனத்தில் உள்ள குமிழமரத்தினது வளைந்த மூக்கனை உடைய முற்றிய கனிகள் உதிர்ந்து கீழே விழ அதனை இளமான்கள் உணவாக உண்ணும் சிறப்பை உடையது வல்வில் ஓரியினது கொல்லிமலை என்று பரணர் பாடியுள்ளார்.

**திண்தேர்ப் பொறையன் தொண்டி** (பாடல் 8 வரி 9)

வலிமையான தேரை உடையவனான பொறையானது வளையல்களைப் போன்று, சேறு நிறைந்த நெய்தல் மலர்களை உடையது தொண்டிப்பட்டனம் என்று குறிப்பிடுகிறார் பாடல் ஆசிரியர்.

**கொற்றச் சோழர் கொங்கரப்பணீ இயர்**
**வெண்கோட் டியானைப் போஎர் கிழவோன்**
**பழையன் வேல் வாய்த்தன்ன** (பாடல் 10 - வரி 6, 8)

வலிமையான தேர்களை உடைய சோழ மன்னர் கொங்கு நாட்டவரை அடக்க வெண்மையான கொம்புகளை உடைய போர்க்களிறுகளை மிகுதியாக தன்னகத்தே வைத்திருப்பவன் போஒர் என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்பவனுடைய வேல்படை போரில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது என்னும் குறிப்பும் உள்ளது.

நட்டனர் வாழிதோழி குட்டுவன்
அகப்பா அழியநூறிச் செம்பியன் (பாடல் 14 வரி, 3, 4)

காதலர் கைவிடுவராயின் குட்டுவது அகப்பா என்னும் மதிலானது ஒருங்கே அழியும்படியாக இடித்து, அழித்து பகலிலே அதை தீயிட்டுக் கொளுத்திய சோழன் செய்த கடுமையான போரினைக் காட்டிலும் மிகுதியான பழிச்சொல் உண்டாகும் என்று தலைவி, தலைவனது பெருமையைத் தோழிக்கு இயற்பட மொழிந்ததாக மாமூலர் பாடியுள்ளார்.

நெடுவரை விடரகத் தியம்புங்
கடுமான் புல்லிய காழறந் தோரே (பாடல் 14 வரி 10, 11)

விரைவாகச் செல்லக்கூடிய குதிரையினை உடைய புல்லி என்னும் மன்னனுடைய வேங்கமலை என்று வேங்கடமலையின் சிறப்பை மாமூலர் குறிப்பிடுகிறார்.

வருவர் வாழி தோழி மூவன்
முழுவழி முள்ளெயி றழுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன் பாசறை (பாடல் 18 வரி, 2,5)

மூவன் என்பானின் முள்போன்ற பற்களைப் பறித்து அழுத்தி வைத்த கதவினை உடையது கடற்கரைச் சோலை நிறைந்த தொண்டிப்பட்டினம். அதற்குரிய தலைவனாகத் திகழ்பவன் வெற்றி வேலினை உடைய சேரமான் அவனது பாசறையில் வீரர்கள் பயமில்லாமல், உறக்கமில்லாமல் இருப்பர் என்று பொய்கையார் குறிப்பிடுகிறார்.

துறைகெழு மாந்தை யன்ன இவள் நலம் (பாடல் 35 வரி 7)

கடல்துறையை உடைய குட்டுவனின் மாந்தை நகரைப் போன்றது தலைவியின் ஊராகும் என்று அம்மூவனார் குறிப்பிடுகிறார்.

ஆண்டலை மதில ராகவும் முரசு கொண்ட
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன் (பாடல் 39 வரி 8, 9)

பகைவரிடம் உள்ள முரசைக் கைப்பற்றிக் காவல் மிக்க அரணையும் கைப்பற்றி வெற்றி கொள்ளும் பாண்டியனது புகழ்மிக்க கூடல் மாநகரம் என்று மருதனைறாகனார் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு நற்றிணைப் பாடல்களில் குறுநில மன்னர்களைப் பற்றியும், கடற்கரை நகர், மன்னர்களின் போர்ச்சிறப்பு, படைகளின் வலிமை, பாசறைச் செய்திகள் போன்ற வரலாற்றுச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன என்பது மெய்மையாகும்.

---

# வாசகர் வாசகம் (2)

அன்புள்ள செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். பழந்தமிழ் சங்க இலக்கியமாம் குறுந்தொகைக் காலத்திலேயே மோர்க்குழம்பு வைக்கின்ற பெண்கள் இருந்த பெருமையை கவிதா நன்கு உணர்த்தியுள்ளார். அதனை ஒரு முனைவர் பட்டம் பெற்ற பெண் எடுத்துக் காட்டியிருந்தது மிகச் சிறப்பு. தாய்மொழியில் உருவாக்கப்படும் கவிதைகளில் வெளிப்படும் கவிஞனின் உள்ளார்ந்த உணர்வு மொழிபெயர்ப்புக்களில் இல்லை என்பதையும் முனைவர் உணர்த்தியிருந்தார்.

இலக்கியப் படைப்புக்களில் காட்டுவிலங்குகளின் தன்மையைக் குறிப்பாக வேழம் பற்றிய செய்திகளைப் பாண்டுரங்கனார் பட்டியலிட்டு விளக்கியிருந்தது பாராட்டும்படி இருந்தது. ஏந்திசை, ஒழுகிசைச் செப்பலோசைகளை ஐம்பொறியார், வள்ளுவர் குறட்பாக்களை முன்னிறுத்தி நன்கு விளக்கியிருந்தார். தெய்வத்திருமதி மரகதம் அம்மையார் அறுபத்து நான்கு கலைகள் என்னென்ன என்பதை கவிச் சக்கரவர்த்தியின் வணக்கப் பாடலோடு அறியவைத்திருந்தது சரியான அறிவூட்டல், யார் டாக்டர் மு.வ.? எனும் தலைப்பில் முனைவர் மு.வ. அவர்களின் எழுத்தாற்றல், பெருமைகளை அன்னாரின் எழுத்தோவியங்களை எடுத்துக்காட்டி, கவிவேந்தர் அரிய கருத்துக்களை நல்விருந்தாய் படைத்திருந்தார்.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்,** திருலோக்கி

# செந்தமிழை நான் மறவேனே

முனைவர் தமிழப்பன்

கொட்டும் மழையில் நனைந்தாலும்
குயலின் பாட்டை நினைந்தாலும்
கொட்டும் அருவி குளித்தாலும்
குளத்தில் நீந்தி மகிழ்ந்தாலும்
எட்டாக் கனியை அடைந்தாலும்
இன்பக் கேணியில் விழுந்தாலும்
சிட்டாய்ப் பறந்து சென்றாலும்

செந்தமிழை நான் மறவேனே! (1)
நல்லார் நட்பை அடைந்தாலும்
நாடாள் நிலைதான் வந்தாலும்
எல்லா உறவும் இணைந்தாலும்
இமயம் ஏறி மகிழ்ந்தாலும்
வல்லார் வணங்கி நின்றாலும்
வையம் கைக்கு வந்தாலும்
செல்லார் வானம் சென்றாலும்
செந்தமிழை நான் மறவேனே! (2)

வாராச் செல்வம் வந்தாலும்
வைய மெல்லாம் புகழ்ந்தாலும்
ஆராப் பகையே அழிந்தாலும்
அமிழ்தம் தந்து நின்றாலும்
கூரார் வேலால் கொன்றாலும்
கொடிய நஞ்சு தந்தாலும்
சீரார் மானம் இழந்தாலும்
செந்தமிழை நான் மறவேனே! (3)

கழுத்தை வெட்டி நின்றாலும்
கழுவில் ஏற்றிக் கொன்றாலும்
கழுத்தில் கல்லைக் கட்டியுமே
கடலில் வீசி நின்றாலும்
கண்கள் பிதுங்க வைத்தாலும்
கழுத்தைக் கண்ணைச் சிதைத்தாலும்
கன்னித் தமிழை மறவேனே! (4)

எழுத்தாய்ச் சொல்லாய் இயங்கிவரும்
இன்பத் தமிழை நான் மறவேன்
எழுத்தாய்ப் பொருளாய் இயங்கிவரு
இயலின் தமிழை நான் மறவேன்
எழுத்தாய் அகமாய் இயங்கிவரு
இசையின் தமிழை நான் மறவேன்
எழுத்தாய்ப் புறமாய் இயங்கிவரு
இன்ப நாடகம் செந்தமிழே!

## வாசகர் வாசகம் (3)

செந்தமிழாம் இதழ்தான் வாழ்க !

முளிதயிரைப் பிசைந்திட்டப் புளிக்குழம்பு
முகிழ்த்திட்ட குறுந்தொகைநூல் விருந்து தந்து
தெளிவுறவே உடம்படுமெய் திருத்தி; மேலும்
திறக்கலைகள் அறுபத்து நான்கும் சொல்லி
குளிர்விக்கும் குறளோசை நயமுரைத்துக்
குஞ்சரமாம் காடுறையும் விலங்கின்காதை
எளிமையுறு மு.வ.வின் வாழ்க்கைப் பாதை
இயம்புவித்த செந்தமிழாம் இதழ்தான் வாழ்க !

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

# திருமுருகாற்றுப்படையில் வழிபாட்டு முறைகள்

து. ஆண்டாள்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

திருமுருகாற்றுப்படை என்ற நூல் சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டுத் தொகுதியில் அதன் கடவுள் வாழ்த்து போல் முதல் நூலாக விளங்குகிறது. இதனை முருகாற்றுப்படை என்றும் கூறுவர். தமிழிலுள்ள சமய நூல்களுள் மிகப் பழமையானது திருமுருகாற்றுப்படையாகும். தமிழ் இலக்கியத்தில் திரு என்ற சிறப்பு அடையினைப் பெற்ற முதல் நூல். இந்நூலின் தலைவன் முருகன் மற்ற ஆற்றுப்படை நூல்களில் இருந்து இது வேறுபட்டது. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, ஆகிய நூல்களின் மன்னனின் கொடை, புகழ், நாடு, மலை ஆகியவற்றைப் பாடி (புகழ்ந்து) இரவலன் தன் வறுமை நிலையை தீர்த்துக் கொள்வான் ஆனால் திருமுருகாற்றுப்படையில், முருகன் வீடு பெற்றான் ஒருவன், வீடு பெற நினைக்கும் ஒருவனுக்கு முருகன்பால் ஆற்றுபடுத்துவதும் நிலைத்த பேரின்பப் பொருளான இறைவனின் அருளைப் பெறவேண்டிப் பாடப்பட்டது.

மேலும், விண்ணுலகத்தோரும், மண்ணுலகத்தோரும் போற்றும் முருகன் எல்லா உயிர்களுக்கும் சூரியனைப் போல் பொதுவானவன். நம்பிக்கையோடு நடத்தும் எல்லா வழிபாடுகளையும் ஏற்பவன். ஊண் துறந்து மெலிந்த முனிவரும் வேதமோதி வழிபடும் அந்தணரும், மற்றும் வழிபடுபவர்கள் அனைவருக்கும் வந்து அருள்புரியும் கருணைவள்ளல், உண்மையை விளக்குவதன் மூலம் நக்கீரர் இந்நூலைப் படிப்பவர்கள் எல்லோரையுமே முருகப் பெருமானிடம் ஆற்றுப்படுத்துகின்றார் என்பது தெளிவாகிறது. மற்றும் இந்நூல் பக்திச் சுவை மிகுந்த நூலாகவும், சமயச் சார்புடைய நூலாகவும் திகழ்கிறது.

## முருகனின் தோற்றம் பற்றிய கருத்து

முருகன் தனித்தெய்வமாகவும், வெற்றிகுரிய கொற்றவையின் மகனாகவும் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகிறான்.

நீலப் பொய்கையில் ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப அறுவரால் பெற்றெடுக்கப்பட்டவன் முருகன் என்று இரத்தினச் சுருக்கமாக முருகனின் தோற்றம் குறித்து திருமுருகாற்றுப்படை கூறுகிறது. ஐவருள் ஒருவர் தீக்கடவுள் என்றும், அறுவர் கார்த்திகை பெண்டிர் என்றும் இந்நூல் தெளிவாகக் கூறவில்லை.

நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ (திரு. 253 - 255)

பின் சங்க நூலான பரிபாடல் மட்டுமே முருகனின் தோற்றம் குறித்து வடமொழி புராணச் சார்போடு விரிவாகப் பேசப்படுகிறது.

சிவன் உமையோடு புணர்ந்து காமத்தை நுகர்ந்து அமையாத புணர்ச்சியை ஒரு கலத்து அமைந்தானாக இந்திரன் அவனிடம் சென்று இப்புணர்ச்சியால் தோன்றிய கருவை அழிப்பாயாக என வேண்டினான். அவவேண்டுகோளின்படி சிவன் அக்கருவை பல கண்டமாகச் சிதைத்து இந்திரனிடமே அளித்தான். சிதைக்கப்பட்ட கரு அமரர் தலைவன் ஆகும் என்பதை தம் ஞானத்தான் உணர்ந்த முனிவர்கள் எழுவரும் இந்திரடனிடமிருந்து அக்கருவைப் பெற்றுச் சென்றனர். அதை அவ்வாறே தம் மனைவியர் கொண்டால் ஏற்புடையதல்ல என்று கருதி வேள்வி செய்து அந்நெருப்பில் அதனை இட்டனர். அதனைக் கடவுள் கற்பினள் ஆகிய அருந்ததி நீங்கிய கார்த்திகைப் பெண்டிர் அறுவர் உண்டனர். கணவரின் விருப்பப்படி நடந்து கொண்ட அக்கற்புடைய மகளிர் அறுவரும் கருவுற்று இமயச் சாரலில் உள்ள சரவணப் பொய்கையில் பதுமப் பயலில் குழந்தைகளை ஈன்றனர். இந்திரன் பகையுணர்வுடன் முனிவர்க்குக் கொடுத்த வரத்தையும் கடந்து வச்சிராயுதத்தால் அக்குழந்தைகளை வெட்டினான். ஆறு தூணிகளும் (அ) துளிகளும் ஆறு வடிவமாகிப் பின் ஒன்றாயிற்று என்று இளவெயினார் விரித்துள்ளார். (பரி. 5.27.54)

முருகன் தனித் தெய்வமாகவும் வெற்றிக்குரிய கொற்றவை மகனுமாகவே முன் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே முருகன் தாய்த் தெய்வத்தினின்று பிறந்த செய்தி தமிழ்நாட்டுக்கே உரியது என்பர். நா. வானமாமலை 14 (தமிழர் பண்பாடும் தத்துவமும் ப.34)

சிவன் மகன், உமைமகன், கார்த்திகைப் பெண்கள் மகன் என்பன எல்லாம் வடமொழி புராணச் சார்பாகக் கூறப்பட்டுள்ளன.

மகாபாரதம் தீக்கடவுளுக்குத் தக்கன் மகள் சுவாகாமூலம் பிறந்தவன் முருகன் என்று குறிப்பிட்டுள்ளது. கச்சியப்பர் சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய நெருப்புப் பொறிகள், காற்று மற்றும் தீக்கடவுளால் எடுத்துச் செல்லப்பட்டு கங்கையில் விடப்பட்டு, கங்கையால் சரவணப் பொய்கையில் சேர்க்கப்பட்டு, அங்கு ஆறு திருவுருவமாகத் தோன்றிய சிறுவனை, சிவன்காட்ட உமையம்மை தன்னோடு எடுத்தணைக்க ஆறுமுகமும் பன்னிரு கையும் உடைய முருகன் தோன்றினான் என்பர்.

சங்க நூல்களில் முருகனின் பிறப்பு பற்றி,

ஆலமர் செல்வன் அணிசால் பெருவிரல் போல வருமென் உயிர்
(கலி - 819-10)

ஆலர் செல்வன்அணிசால் மகன்விழாக்கால் கோள் (கலி-53:14-15)

ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை

இவ்வாறு முருகனின் பிறப்பு வரலாறு கூறுகிறது.

## சமய தத்துவம்

மனிதன் அறிவு பெறத் தொடங்கியவுடன் சமய உணர்வு அவனிடம் ஏற்படத் தொடங்கியது. மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்குவதை மனிதன் அனுபவத்தில் கண்டறிந்தான். சமயம், உண்மையே கடவுள் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. மேலும் எல்லாச் சமயத்தினரும் அன்பே கடவுள் என்றும் கூறுகின்றனர். மனிதன் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்றும் தீமை செய்தோருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்றும் சமய தத்துவம் குறிப்பிடுகின்றது.

மேலும் சமயத்தில் நம்பிக்கையுடன் இருப்பவன் ஒழுக்கத்திலும் நம்பிக்கை உடையவனாகிறான் ஆகையினால் ஓர் ஒழுங்கான வாழ்க்கைக்குச் சமயம் தேவைப்படுகிறது.

மனிதன் சமயத்தில் நம்பிக்கை வைத்துச் சமயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து, மன அமைதியுடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழ்கிறான்.

எல்லாம் இறைவன் செயல் என்று நினைத்துக் கொண்டு ஏமாற்றங்களையும் துன்பங்களையும் தூங்கிக் கொள்கின்ற மன ஆற்றல் சமயத்தின் மூலம் ஏற்படுகிறது. ஆகையால் சமய நம்பிக்கையுள்ளவன் கவலைப்படாமல் வாழ்க்கையை நடத்த முயல்கிறான்.

மேலும் ஆறுவகைச் சமயங்களுள் குமரக் கடவுளைப் பரம் பொருளாகக் கொண்ட சமயம் கௌமாரம். குமரனைத் தலைவனாக கொண்டதால் இச்சமயத்திற்கு அப்பெருமான் பெயரால் கௌமாரம் என்னும் பெயர் அமைந்துள்ளது. குமரன் - குமரம் - கௌமாரம் என்று சமயத்தின் பெயர் தோன்றலாயிற்று.

## வழிபாட்டு முறைகள்

வழிபாட்டின் முக்கிய நோக்கம் மக்கள் தங்கள்இறைவனை மகிழ்விப்பதாகும். திருவிழாக் காலங்களில் மக்கள் ஆடல், பாடல்கள், வேண்டுதல் செய்தல் போன்றவற்றை ஔவையார் ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்று சுட்டுவதும் சிந்தனைக்குரியது. கோவிலுக்குச் சென்று அங்கே கடவுளுக்குச் செய்யும் வழிபாடு ஒன்றே சிறந்ததாகும் என்பது அதனால் தெளிவாகப் புலப்படுகிறது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம்மிடையே தொன்று தொட்டு வழங்கி வரும் ஆறோர் வழக்காகும். அக்கூற்றிலே கோயிலின் புனிதத் தன்மை மட்டுமின்றி அதன் சமூக முக்கியத்துவம் உள்ளடங்கி இருக்கிறதென்றே கருத வேண்டும் எனக் கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

கோயில் வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாகியிருப்பதாகச் சிக்மண் பிராய்ட் கருதுகின்றார். மனிதன் துன்பத்திலிருந்து விடுபடக் கருதி வழிபாடு செய்கிறான். இயற்கையான ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் தோற்றம் பெற்றதே வழிபாடுகள் எனலாம். இறைவனை மனிதன் பொதுவாக மகிழ்ச்சியான நேரத்தில் நினைப்பதில்லை. துன்பம் ஏற்படுகின்ற போதுதான் ஆலயங்களை நாடிச் சென்று குறைகளை நீக்குமாறு இறைவனை வேண்டுகிறான். மனிதன் தன்னுடைய கவலையை மறந்து மன அமைதி பெறுவதற்கு இறைவழிபாடு உறுதுணை புரிகிறது.

மேலும் திருமுருகாற்றுப்படையில் முருகனின் அருள் பெறுவதற்கு முருகன் வீற்றிருக்கும் இடங்களுக்குச் செல்லும் வழியினைக் குறிப்பிடவில்லை. ஆனாலும் அறுபடை வீடுகளிலும் முருகன் வழிபடும் முறையினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. முருகப் பெருமானை இடையறாது, எப்பொழுதும் நினைந்து மெய்ஞானத்தினைப் பெற்ற முனிவர்கள் முன்செல்ல, இனிய மொழிகளைப் பேசும் கந்தருவர்கள் பின் செல்ல இவர்களுடன் இணைந்து கந்தர்வ மகளிர் யாழினை மீட்டிப் பாடிக் கொண்டே சென்றனர். அவர்களுக்குப் பின்னால் சிவன், திருமால், இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் சென்று வழிபட்டனர்.

**தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட**
**வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய**
**வுறுகுறைமருங்கிற்றம் பெறுமுறை கொண்மா**
**ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்** (திருமுருக - 171-174)

என்று குறிப்பிடுகிறது. அந்தணர்கள் தாங்கள் வழிபட வேண்டிய முக்காலமும் அறிந்து பூணூலையும் புலராத ஆடையையும் அணிந்து கொண்டு தலைக்கு மேலே குவித்த கையினராய் முருகப் பெருமானைப் புகழ்ந்து துதித்து ஆறு எழுத்துக்களைத் தன்னிடத்துக் கொண்ட பெறுதற்கு அரிதான சரவணபவ என்னும் மந்திரத்தைக் கூறி நறுமணம் மிக்க மலர்களை இட்டு வழிபட்டனர்.

**உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்**
**தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி**
**நாவியன் மருங்கி னவிலப்பாடி**
**விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்து** (திருமுரு - 185 - 188)

என்று அந்தணர்களின் வழிபாட்டு முறையினைக் குறிப்பிடுகின்றது. வெறியாட்டுக்களம் ஆராவாரிக்கும் படிக் கொம்புகள் பலவற்றையும் சேரஊதி மணியை ஒளித்து முருகப் பெருமானுடைய யானையை வாழ்த்தி, பின்னர் வெற்றித் திருமகளான கொற்றவையின் மகனே ! தேவர்கள் வணங்கும் படைத்தலைவனே! எல்லா நூல்களையும் அறிந்த புலவனே! எனப்பலவாறு புகழ்ந்து வழிபட்டனர்.

## அருள்

உலக வாழ்வில் ஏற்படும் பற்றுகளினால் வரும் துன்பறுகளைக் கூறி அவற்றை நீக்கி இறையருள் பெறவே அனைத்து சமயங்களும் கூறுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே திருமுருகாற்றுப்படை இறையருள் பெற்ற ஒருவன் அவனருள் செய்த தகுதியுடைய ஒருவனை ஆற்றுப்படுத்துகிறது. இறைவனின் அருளானது அருவிபோல வீழ்ந்து பல நன்மைகளைச் செய்கின்றது. ஆனால் உயிர்கள் அதனை ஏற்காமல் அஞ்சி நடுங்குகின்றன.

குருஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே. (திருமுருக - 313-317)

எனும் அடிகளின் மூலம் அறியலாம்.

உலக வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்குக் காரணமாக அமைவது ஆணவமாகும். இதிலிருந்து விடுபடுவதற்குரிய வழிகளைக் கூறுவதாகச் சமயங்கள் விளங்குகின்றன. அருளாளர்களின் வாழ்வும் அவர்களின் பாடல்களும் இதனையே குறிப்பிடுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறியில் ஏதேனும் ஒன்றில் நின்று உண்மை அன்புடன் இறைவன் திருவடியினை நினைந்து வழிபட்டால் ஆணவத்தின் தன்மையனை நீக்க முடியும் இதனை,

................................ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகி
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே (திருமுருகா 92-94)

என்கிறார் நக்கீரர்.

## வீடுபேறு

முருகனின் உருவச் சிறப்பாக உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் மகிழும்படி பல சமயத்தவரும் போற்றுகின்ற ஞாயிறு போன்று அடியவர்களின் அறியாமையை நீக்கி ஆட்கொள்ளும் திருவடியினையும் அசுரர்களை அழிக்கும் ஆற்றலுடையவன. இத்தகைய ஆற்றல் பெற்ற முருகனை

நினைத்து அவன் வீற்றிருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு நல்லறம் செய்தால் விரைவில் வீடுபேறு அடையலாம்.

சேவடிபடரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலஉடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே (திருமுருகா 62-65)

என்று வீடுபேற்றினை இன்றே பெறலாம் என்று கூறுகிறது.

## முடிவுரை

இக்கட்டுரையில் முருகனின் தோற்றம் பற்றியும் நூலின் சிறப்பும், சமயத் தொடர்பான கருத்துக்களையும், வழிபாட்டு முறையினையும் மற்றும் முருகப் பெருமானின் அருள் பற்றியும், வீடுபேற்றிற்கான வழியினையும், எல்லாத் தன்மையும் பொருந்தியுள்ள கடவுளாக முருகப் பெருமானின் கருணையும் இக்கட்டுரையின் மூலம் உணரப்படுகிறது.

பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அருள்பெறல் மரபின் பெரும்பெயர் முருக (திருமுருக 269 - 270)

என்ற அடிகள் மூலம் பலரும் புகழ்தற்குரிய பெருமை வாய்ந்த கடவுளாகவும், பக்தியோடு வணங்குவோர்க்கு வேண்டும் வரம் தரும் இறைவனாகவும் முருகப் பெருமான் விளங்குகிறார்.

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.* (214)

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.* (215)

# தொல்காப்பியப் பூங்காவில் பண்டைய மகளிர் மாண்பு

பா. திருமகள்
குமாரபுரம்

தொல்காப்பிய பூங்கா காட்டும் பண்டைய மகளிரின் மாண்பினைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தரலாம்.

1. திருமணச் சடங்குமுறை
2. பிள்ளை பேற்றின் மகிமை
3. கணவன் மனைவியிடையேயான அன்பு
4. தலைமகனின் திருந்திய உள்ளம்
5. இன்பச் சுற்றுலா
6. வீர மகளிர் செயல்
7. பாசறையில் மகளிர் தொண்டு
8. வினை முடித்து தலைவியைக் காண தலைவன் வரும் விதம்
9. முதியோர் விருப்பம்

இவ்வாறான கருத்துக்களைக் கொண்டு பெண் சார்ந்த அறங்கள் தொல்காப்பியப் பூங்காவில் கவிதை வடிவில் நூற்பா கருத்துக்கள் வகுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## திருமணச் சடங்கு முறை

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலையான"

"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே"

ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் நல்லூழின் ஆணையால் எதிர்ப்பட்டு உள்ளப் புணர்ச்சியிற் கூடி ஒழுகினராயினும், தலைமகளுடைய பெற்றோர் உடன்பாடின்றி அவ்விருவரும் மண வாழ்க்கையை மேற்கொள்ள இயலாது. ஆகவே ஒருவரையொருவர் பிரியாது வாழ்வதற்குரிய உள்ளத்துறுதியை உலகத்தார் அறிய வெளிப்படுத்தும் நியதியாகிய வதுவைச் சடங்குடன் தலைமகளை மணந்து கொள்ளுதல் இன்றியமையாத சிறப்புடைய நிகழ்ச்சி ஆகும்.

கணவனை விடச் சிறந்த தெய்வம் மனைவிக்கு இல்லை என்றும், அவனை இன்னவாறு வழிபடுதல் வேண்டுமெனவும், தலைமகளுக்குப் பெற்றோர் கற்பிக்கின்றனர். அந்தணர், சான்றோர், அருந்தவத்தேவர், விருந்தினர் முதலியவர் பால் இன்னவாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்று தலைமகளுக்குத் தலைவன் கற்பிக்கின்றான். நின் மனைவியை இவ்வாறு பாதுகாப்பாயாக என்று தலைவனுக்கும், நின் கணவனுக்கு இவ்வாறு பணி செய்து ஒழுகுவாயாக எனத் தலைவிக்கும், சான்றோர் கற்பிக்கின்றனர். வதுவைச் சடங்காகிய கரணம் நிகழுங்கால் கற்பிக்கப்பெறும்.

அந்தணர், அரசர், வணிகர் என்னும் மேற்குலத்தார் மூவரையும் மேலோர் மூவர் என்பர். கீழோர் என்பது நாலாம் வருணத்தவராகிய வேளாண் மாந்தரைக் குறித்ததெனவும் தமிழகத்தில் நால்வகை வருணப்பாகுபாடு இடம் பெறாத தொன்மைக் காலத்தில் எல்லா மாந்தருக்கும் வதுவைச் சடங்காகிய கரணம் பொதுவாக அமைந்தது எனவும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்த்தது எனவும் ஒரு குலத்திற்கு ஒரு நீதியாக வருண வேறுபாட்டினை வேளாண் மாந்தர் ஏற்றுக் கொள்ளாமையால் தவிர்த்தது என்ற உண்மையினையும் கூறுகிறார்.

தமிழகத்தை ஆட்சி புரிந்த முடியுடை வேந்தர் மூவருமே மேலோர் என்றும் அவர்தம் ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்கள் எல்லோரையும் கீழோர் என்றும் குறிப்பிடுகின்றார் கலைஞர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்......

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 July 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2013-2014ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.